




# ஹர ஹர சங்கரா



FREE COPY
August - 2025
Vol. 4 - ISSUE 10

# KODAMBAKKAM TIMES



**SUSWAAD**

## THE NAME FOR HIGH QUALITY TRADITIONAL SWEETS AND SAVOURIES

3/2, Venkatraman Street,
T. Nagar, Chennai - 600 017.
Ph.: 2815 5558, 2815 2678

## ITEMS AVAILABLE FOR GOKULASHTAMI

### 16.08.2025 (SATURDAY)

**Sales : Subject to availability of stocks only**

| | | | |
|---|---|---|---|
| Vella Cheedai | வெல்லச் சீடை | Nei Appam | நெய் அப்பம் |
| Uppu Cheedai | உப்பு சீடை | Athirasam | அதிரசம் |
| Kai Murukku | கை முறுக்கு | Rava Laadu | ரவா லாடு |
| Thattai | தட்டை | Mixture | மிக்ஸர் |
| Thenkuzhal | தேன்குழல் | Butter | வெண்ணை |
| Maa Laadu | மாலாடு | Aval | அவல் etc., |

**BRANCHES**

10/3, Madhans Apartment, Ground Floor,
South Canal Bank Road, Opp. St. Johns School,
Mandaveli, Chennai - 600 028
Ph.: 2495 0978, Cell: 99406 54138

No.9/A, Kalinga Colony, P. T. Rajan Salai,
K.K. Nagar, Chennai - 600 078
Opp. Shakthi Vinayagar Temple, Near Sivan Park.
Ph.: 2366 2300 Cell : 97899 76111

SINCE 1974



# SHARADHA STORE



WMB

**(ஹோம்லி டேஸ்ட் • பணிவுடன் பணிவிடை)**

Plot No: 39, Chinthamani Vinayagar Koil Street, (Opp. Periyar Park),
Ramakrishna Nagar, Valasaravakkam, Chennai - 600 087.
E-Mail : saibuju.rr@gmail.com. Ph: 98841 53428
15/5, Gandhi Street, Alwarthirunagar, Chennai - 600 087. Ph: 044 - 2377 3233

**இலவச வீட்டு டெலிவரி. உயர்தர அனைத்து விதமான மளிகை சாமான்கள் கிடைக்கும்**

Available at Alwarthirunagar only. Timings 9 AM to 1 PM & 4 PM to 8 PM

## ஸ்ரீ ஜெயந்தியை முன்னிட்டு ஆர்டர் எடுக்கப்படும்





கைமுறுக்கு, தட்டை,
உப்பு சீடை, வெல்ல சீடை,
அப்பம், ரவாலாடு,
மாலாடு, பயத்தலாடு,
கடலை உருண்டை,
கிருஷ்ணர் பாதம் கிடைக்கும்.

S.V.S. Refined Oil மற்றும் வெண்ணையில் சிறந்தமுறையில் சுவையான பட்சணங்கள் செய்து தருகிறோம்.

**Sharadha Home Made Pickles, Home Made Sweets & Savouries**

கல்யாணம் மற்றும் சுபகாரியங்களுக்கு தேவையான சீர் பட்சணங்கள் சிறந்த முறையில் செய்து தரப்படும்

சாரதாஸ் மூங்கில் அரிசி,
வரகு அரிசி, சாமை அரிசி,
குதிரைவால் அரிசி,
தினை அரிசி கிடைக்கும்.

### சீர் பட்சணங்கள்

11 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
9 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
7 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
5 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
4 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
3 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்

| பருப்பு தேங்காய் கூடு வகைகள் | இனிப்பு வகைகள் |
|---|---|
| லட்டு கூடு | மைசூர்பாகு, லட்டு |
| மணோகர கூடு | அதிர்சம், பாதுஷா |
| மைசூர்பாகு கூடு | சோமாசி |
| தேங்கா பர்பி கூடு | தேங்கா பர்பி |
| கடலை கூடு | |
| பொட்டுகடலை கூடு | விருத அப்பம், |
| முந்திரி கூடு | காப்பரிசி, |
| ஆசிர்வாத பருப்பு | புட்டு, வறுபமிறு |
| தேங்காய் கூடு | கிடைக்கும் |



**OUR HEAD OFFICE @**

No.95/51, Arya Gowda Road, West Mambalam, Chennai - 600 033.

**98408 53429 / 2489 3223**

# பெரியபாளையத்தம்மன்

"எது பொய்த்தாலும் பெரியபாளையத்தாள் அருள் பொய்க்காது" என்ற முதுமொழி இங்கு வழக்கத்தில் உள்ளது.



"பாளையம்" என்றால் "படைவீடு" என்று பொருள், பெரியபாளையம் என்றால் அம்மனின் பெரிய படைவீடு என்பதாகும்.

ரேணுகாதேவி பவானி பெரியபாளையத்து அம்மனாக கொலு வீற்றிருக்கிறாள்.

ஆரணியாற்றங் கரையில் அன்னை வீற்றிருந்து கேட்ட வரம் தரும் பவானி அம்மன் புற்றுக்குள் சுயம்புவாக தோன்றினாள்.

பெரியபாளையத்து அம்மன் நான்கு திருக்கரங்களுடன் சங்கு, சக்ராயுதம், கத்தி, கபாலக்கிண்ணமும் ஏந்தி அமர்ந்த நிலையில் அருளாட்சி புரிகிறாள்.

கபாலக்கிண்ணத்தில் மகாலட்சுமி, துர்க்கை, சரஸ்வதி ஆகிய மூவரும் இருப்பதாக தத்துவம் உண்டு.

உலக வாழ்க்கைக்கு தேவையான செல்வம், கல்வி, உடல் சக்தி (வீரம்) மூன்றையுமே அன்னை வழங்குகிறாள்.

ஆந்திரா வளையல் வியாபாரிகள் வளையல் மூட்டையை தலையில் சுமந்தபடி கால்நடையாக வந்து சென்னையில் விற்பதற்கு வருவார்கள்.

ஆந்திராவுக்குத் திரும்பி கொண்டிருந்த வளையல் வியாபாரி, ஒருவர் பெரியபாளையத்தில் ஒரு வேப்ப மரத்தடியில் அமர்ந்து சற்று நேரம் தூங்கினார்.

சிறிது நேரம் கழித்து கண் விழித்தார், அருகில் வைத்திருந்த வளையல் மூட்டை காணாததை அறிந்து தேடினார். அவரது கண்ணில் பெரிய பாம்பு புற்று தென்பட்டது.

சந்தேகத்துடன் அந்த புற்றுக்குள் எட்டிப் பார்த்தார். வளையல் மூட்டை அங்கு கிடந்தது. ஒரு கம்பை எடுத்து வந்து வளையல் மூட்டையை எடுக்க முயன்றார், அவரால் முடியவில்லை.


SREE MANGALAGURU JOTHIDA NILAYAM

'VAAZHVIL VELICHAM'

SURESH MADHAVAN

93609 45818

(With Appointment Whatsup Only)

நீண்டநேரம் போராடியும் அவரால் வளையல் மூட்டையை எடுக்க இயலவில்லை. எனவே தனது ஊரான ஆந்திராவில் உள்ள வீட்டுக்குத் திரும்பி சென்றுவிட்டார்.

அன்று இரவு அவர் கனவில் அம்மன் தோன்றி "நான் ரேணுகா தேவி, பெரியபாளையத்தில் பவானி ஆக அவதாரம் எடுத்துள்ளேன். உன் வளையல் மூட்டை விழுந்துள்ள புற்றில் சுயம்புவாக கோவில் கொண்டுள்ளேன். இதை நினைத்து நீ பயப்படாதே. நீ மீண்டும் உடனே அங்கு வா, தினமும் வணங்கி வழிபட ஒரு கோவில் எழுப்பு" என்று உத்தரவிட்டாள்.

காலை கடப்பாரை எடுத்து வந்து பாதி புற்று இடிக்கப்பட்ட நிலையில் "ணங்" என்று ஒரு சத்தம் கேட்டது கடப்பாரையில் ரத்தம் காணப்பட்டது.

புற்றில் இருந்து ரத்தம் வழிந்தது. அந்த பகுதி முழுவதும் ரத்தம் கசிந்தது, பூமியே ரத்தத்தால் நனைந்து போனது.

புற்றுக்குள் இருந்த சுயம்புவின் மேல் பகுதியில் இருந்து தான் ரத்தம் "குபு குபு" என்று வந்து கொண்டிருந்தது. உடனே வளையல் வியாபாரி தன்னிடம் இருந்த மஞ்சளை எடுத்து ரத்தம் பீறிட்டு வந்த இடத்தில் வைத்து அழுத்த ரத்தம் நின்று போனது.

அந்த இடத்தில் சுயம்புவை மூலமாகக் கொண்டு அம்பிகைக்கு கோவில் கட்டப்பட்டது. கருவறையில் சுயம்பு அம்மன் மீது வெள்ளி கவசமிடப்பட்டு வணங்கப்பட்டு வருகிறது.

தற்போதும் அந்த கவசத்தை அகற்றிவிட்டு பார்த்தால் சுயம்பு அம்மன் உச்சியில் கடப்பாரை பட்ட காயத்தின் வடுவை இப்போதும் காணலாம்.

முதலில் விநாயகரை வணங்கி அடுத்து பின்புறம் உள்ள மாதங்கி அம்மனை வழிபட வேண்டும். பின்னர் பெரியபாளையத்து அம்மனை வணங்கி வழிபட வேண்டும்.

சுற்றுப் பிரகாரத்தில் உற்சவர், வள்ளி-தெய்வானை சமேத முருகர், பெருமாள், தாயார், ஆஞ்சநேயர், பரசுராமர் சன்னதி உள்ளன.

ஆண்டுதோறும் ஆடி மாதம் முதல் நாள் தொடங்கி, ஆடி கடைசி நாள் வரையில் திருக்கோயில் விழாக்கோலம் கொண்டுள்ளது. அம்மனுக்கு விசேஷ அலங்காரத்துடன் நவகலச பூஜை செய்யப்படுகிறது.

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

**COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar**

**K K NAGAR & VADAPALANI EDITION**

**COVERING AREA :**

**Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam**

**044 2484 4114 / 93826 82128 / 89390 70034**

**E-mail : kodambakkamtimes@yahoo.com**

வெள்ளிக்கிழமை கோ பூஜையும், பால், தயிர், பன்னீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் மூலம் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகமும், கணபதி ஹோமமும் சிறப்பாக செய்யப்படுகிறது.

ஆரணி, பெரியபாளையம், ஊத்துக்கோட்டை பகுதியில் வேகமாக பரவிய வைசூரி, காலரா போன்ற நோய்களிலிருந்து மக்களைக் காத்தருளினாள் அன்னை.

அம்மை நோய் உள்ளவர்கள் இங்கு வழங்கும் தீர்த்தம் அருந்தி வந்தால் விரைவில் குணமாகும்.

அம்மனுக்கு பிரியமான வேப்பிலைகளை கொண்டு தயாரிக்கப்பட்ட வேப்பிலை சரத்தை உடம்பில் கட்டிக்கொண்டு ஆலயத்தை சுற்றி வந்து தங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றுகிறார்கள்.

அருகில் சிறுவாபுரி, ஆண்டார் குப்பம், சுருட்டப்பள்ளி ஸ்தலங்கள் உள்ளன.

காஞ்சி மஹா பெரியவர் இந்த ஆலயத்திற்கு வந்து தரிசித்துள்ளார். மஹா பெரியவர் தரிசித்த பிறகு இக்கோயில் உலக அளவில் பிரசித்தி பெற்றது.

பொங்கல் வைப்பது, மொட்டை அடிப்பது, காது குத்துவது, மடி பிட்சை எடுத்து பொங்கல் வைப்பது என்று பக்தர்கள் வேண்டிக் கொள்கின்றனர்.

பெரியபாளையம் பவானி அம்மன் பலருக்கு குலதெய்வமாக இருந்து காத்து வருகிறாள். சென்னையில் இருந்து சுமார் 45 கி.மீ. தொலைவில் பெரியபாளையம் உள்ளது. திருவள்ளூர், பொன்னேரி வழியாக பெரியபாளையம் வந்தடையலாம்.

---



# வில்வ மகிமை

வில்வ இலை ரொம்பவே உயர்வானது. வில்வத்தோட பெருமைகளைப் பற்றி சிவபுராணம் விரிவாக சொல்லி உள்ளது. வில்வமரத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள். ஒரு வில்வ மலரானது ஒரு லட்சம் தங்க புஷ்பங்களுக்கு இணையானது என்று சொல்லியிருக்கிறார்கள்.

அப்படி என்றால் அதோட சிறப்பு உங்களுக்குப் புரியுமே. அதைத் தவிர ஒரு வில்வ மரத்தை வீட்டுல் வளர்த்தால் அஸ்வமேத யாகம் செஞ்ச பலனும், ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பலனும், கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய பலனும் உலகில் உள்ள அத்தனை சிவாலயங்களையும் தரிசித்த பலனும் கிடைக்கும்.

அதைத் தவிர வில்வத்துக்கு மட்டுமே உள்ள தனிச் சிறப்பு அதற்கு நிர்மால்ய தோஷம் கிடையாது. அதைப் பறித்து எத்தனை நாள்கள் ஆனாலும் உலர்ந்து போனாலும் கூட பூஜைக்குப் பயன்படுத்தலாம், மற்ற மலர்களையோ இலைகளையோ அந்த மாதிரிப் பயன்படுத்தக் கூடாது. இது வில்வத்துக்கு மட்டுமே உள்ள தனிச் சிறப்பு.



# வைகுண்டத்திலிருந்து விஷ்ணுவால் அனுப்பப்பட்ட சுதர்சன சக்கரம்

இந்த சக்கரத்தைப் பார்ப்பது ஒரு வரப்பிரசாதம். இது வைகுண்டத்திலிருந்து விஷ்ணுவால் அனுப்பப்பட்ட சுதர்சன சக்கரம். பத்ராசலம் ஸ்ரீ சீதாராமச்சந்திர சுவாமி கோயிலின் கருவறையில் அமைந்துள்ள சுதர்சன சக்கரம் யாராலும் செய்யப்பட்டது அல்ல.

அது எப்படி வந்தது தெரியுமா? பக்த ராமதாஸ் கோயிலைக் கட்டிய பிறகு, அவர் சிறந்த உலோகச் சிற்பிகளைக் கொண்டு வந்து கோயிலின் மேல் சுதர்சன சக்கரத்தைப் பிரதிஷ்டை செய்து விட்டு அவர்களைக் கொண்டு கருவறையில் அமைந்துள்ள சுதர்சன சக்கரத்தையும் செய்ய சொன்னார். ஆனால் அவர்கள் எத்தனை முறை முயற்சித்தாலும் அது உடைந்து விடுகிறது அல்லது சரியாகப் பொருந்தவில்லை.

அன்று இரவு கலக்கமடைந்த ராமதாஸின் கனவில் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி தோன்றி, "பக்தரே சுதர்சன சக்கரம் என்பது சாதாரண மனிதர்களால் செய்ய முடியாத அளவுக்குப் பெருமை வாய்ந்த ஒன்று. அதனால்தான் நான் என்னுடைய சுதர்சன சக்கரத்தை உனக்குத் தருகிறேன். அது கோதாவரியில் அமைந்துள்ளது. அதைக் கொண்டு வந்து நிறுவங்கள்" என்றார். மறுநாள் ராமதாஸர் நீச்சல் வீரர்களுடன் தேடினார். ஆனால் அது தென்படவில்லை.

ராமர் மீண்டும் அவரது கனவில் தோன்றி, "என் மீது மிகுந்த பக்தி கொண்டவர்களுக்கு மட்டுமே சுதர்சன சக்கரம் தெரியும்" என்றார். ராமதாசர் தாமே சென்று கோதாவரி மாதாவை வணங்கி, பகவான் ராமச்சந்திரரைப் புகழ்ந்து கோதாவரியில் தனது கைகளை வைத்தார். உடனே சுதர்சன சக்கரம் வந்து அவர் கைகளில் நின்றது. அந்த சுதர்சன சக்கரத்தைத்தான் இப்போது நாம் காண்கிறோம். பத்ராசலம் அதன் பெரும் புகழின் காரணமாக ஒரு சிறந்த யாத்திரைத் தலமாகும்.

ஸ்ரீராம ராம ராமேதி ராமே ராமே மனோரமே
சஹஸ்ரநாமம் சமம் ராம நாமம் ஒன்றே வரம்


# "பெரியவாதான் ஆஞ்சநேயர் கோவில் கும்பாபிஷேகத்தை நடத்திக் குடுக்கணும்"

வடக்கே ஸாமல்கோட் நகரில் பெரியவா முகாம். நல்ல கூட்டம். வரிசையாக பக்தர்கள் "க்யூ"வில் நகர்ந்து கொண்டிருந்தனர். பெரியவாளுடைய பரம பக்தர் ஒருவர் க்யூவில் நகர்ந்து கொண்டே பெரியவாளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது அவருடைய கண்களுக்கு மட்டுமே வித்யாசமான ஒரு காட்சி தெரிந்தது.

ஆனால் வெளியே பார்ப்பதற்கு பெரியவா சாதாரணமாக எல்லாரையும் ஆசீர்வதிப்பது போல் இருந்தது. ஆனால் பெரியவா ஒரே நேரத்தில் ரெண்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்.

மஹான்களின் சந்நிதியில் இந்த மாதிரி ஒரே சமயத்தில் பல வேஷங்களை அவர்கள் போடுவது ஒன்றும் புதுசில்லை. வேடிக்கை என்னவென்றால் வேறு யாருடைய கண்ணுக்கும் இந்த மாதிரி பெரியவா அண்ணாந்து பார்த்து யாரையோ கும்பிட்ட விஷயம் தெரியவில்லை. பக்தருக்கோ ஒரே நெருடல். கேள்விக்குறி, ஒரு வேளை ப்ரமையோ?



பக்தரின் முறை வந்ததும் ... பெரியவா முன் விழுந்து வணங்கிவிட்டு நின்றார். பக்தர் பேசும் முன், பெரியவா கேட்டார்...

"ஒன் கண்ணுக்கு அது தெரிஞ்சுதோ"

ஆஹா, ஒரே ஒரு கேள்வியால் எப்பேர்ப்பட்ட தர்சனத்தை "சந்தேகமே வேணாம், சத்யந்தான்" என்று நிவர்த்தி செய்து விட்டார்.

"ஆமா பெரியவா"

"சரி, சரி. அவருக்கு ஒரு கோவில் கட்டு. என்ன? நீ என்ன ஒசரத்ல அவரைப் பாத்தியோ ... அதே ஒசரம் இருந்தாப் போதும்".

பக்தர் ஏதோ கனவில் மிதப்பதைப் போல் உணர்ந்தார்.

ஆம். அவர் பார்த்தது ஷாக்ஷாத் ஆஞ்சநேய ஸ்வாமியைத்தான்.

அந்த ஆனந்தமான அதிர்ச்சி பன்மடங்காகப் பெருகியது. அந்தக் காட்சி சத்யமே என்று பெரியவா அங்கீகரித்த போது என்ன ஒரு பாக்யம்.

அவ்வளவுதான் ஜோர், ஜோராக ஆஞ்சநேயஸ்வாமிக்கு ஆலயம் எழும்பியது.

பெரியவா உத்தரவாயிற்றே.

ரொம்பக் குறுகிய காலத்தில் கட்டப்பட்ட கோவிலுக்கு கும்பாபிஷேகம் பண்ண ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளை அந்த பக்தர் வேண்டிக் கொண்டார். குறிப்பிட்ட நாளில் வேறு ஏதோ வேலை வந்துவிடவே, பெரியவாளால் வரமுடியவில்லை. கும்பாபிஷேகம் பண்ணுவது ஏனோ தடைபட்டது. ஓடோடி வந்தார் அந்த பக்தர் மஹா பெரியவாளிடம்.

"பெரியவாதான் ஆஞ்சநேயர் கோவில் கும்பாபிஷேகத்தை நடத்திக் குடுக்கணும்."

"என்னால எப்படிப்பா இப்போ வர முடியும்? நீ பேசாம இரு. அவரோட கும்பாபிஷேகத்தை அவரே நடத்திக்குவார்", அபயம் குடுத்தார்.

பக்தருக்கோ ஒன்றுமே புரியவில்லை. கும்பாபிஷேகத்துக்கு இன்னும் ரெண்டே நாட்கள்தான். எல்லா ஏற்பாடும் பண்ணியாகிவிட்டது.

பெரியவா திருவாக்கில் அசைக்க முடியாத நம்பிக்கையோடு அமைதியாக இருந்தார். ரெண்டு நாட்களுக்கு அப்புறம்தான் பெரியவா சொன்னதின் அர்த்தம் புரிந்தது.

குடம், குடமாக தீர்த்தங்களைக் கொட்டி அபிஷேகம் பண்ணுவது போல், படு பயங்கரமான மழை, அதோடு இல்லாமல் தன் புத்ரனுக்காக சண்ட மாருதமாக வீசி வாயுபகவான் தன் மகிழ்ச்சியை எல்லோருக்கும் உணர்த்தினார். அதைத்தான் பெரியவா சொன்னார். "அவரோட கும்பாபிஷேகத்தை அவரே நடத்திக்குவார்".

---

# துவரிமான்

மகாவிஷ்ணுவின் முதல் அவதாரமான மச்ச அவதாரம் நிகழ்ந்த தலம் துவரிமான். இங்குள்ள ரங்கராஜ பெருமாள் கோயிலுக்கு அருகில் அகோபில ஜீயர் சுவாமியின் பிருந்தாவனம் உள்ளது. மடத்தின் 40தாவது பட்டமான இவரது திருநாமம் ரங்கநாத சடகோப யதீந்திர மகாதேசிகன் சுவாமிகள்.

1923ல் இவர் மதுரை கூடலழகர், அழகர்கோவில், திருமோகூர், ஸ்ரீவில்லிபுத்தூர் தலங்களை தரிசித்து விட்டு துவரிமானில் தங்கியபோது முக்தியடைந்தார்.

இவரது சமாதிக்கோயிலான பிருந்தாவனம் வைகை நதிக்கரையில் கட்டப்பட்டது.

கருவறையில் ஜீயர் வலது கையில் திருத்தண்டும், இடது கையில் ஓலைச்சுவடியும் தாங்கிய கோலத்தில் காட்சியளிக்கிறார். செப்புத்திருமேனி ஒன்றும் உள்ளது.

**ஜீயரின் அற்புதங்கள் :**

ஜீயர் மடாதிபதியாக இருந்த காலத்தில் அற்புதங்கள் பல நிகழ்த்தினார். ஆந்திராவில் கர்நூல் மாவட்டத்தில் உள்ளது அகோபிலம் மடம். இங்குள்ள



நரசிம்மர் கோயிலுக்கு அருகில் பிரம்ம ராட்சஷன் ஒருவன் இருந்ததால் பக்தர்கள் கோவிலுக்கு செல்ல முடியாமல் சிரமப்பட்டனர். இதையறிந்த ஜீயர் நரசிம்ம மந்திரம் ஜபித்து ராட்சஷனை விரட்டினார்.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளுடன் நேரில் பேசும் திருக்கச்சிநம்பி போல் ஜீயரும் பேசும் சக்தி பெற்றிருந்தார்.

ஒருமுறை மடத்தின் யானைக்கு மதம் பிடிக்கவே பாகனால் அடக்க முடியவில்லை. இந்நிலையில் ஜீயர் யானையின் முகத்தில் தீர்த்தம் தெளித்து கையால் தடவிக்கொடுக்க யானை சாந்தமானது.

ஆந்திராவிலுள்ள கட்வல் சமஸ்தானத்தில் சோமபூபால் என்பவரின் ஆட்சிக்காலத்தில் சென்னகேசவப் பெருமாள் கோயில் கட்டப்பட்டது.

அப்போது கோயிலுக்குள் பிராமணர் ஒருவர் கொல்லப்படவே சோமபூபாலுக்கு வாரிசு இல்லாமல் போனது.

இதன்பின் கட்வல் வந்த ஜீயர் மூன்றாண்டுகள் தங்கி பெருமாளுக்கு புதிய சிலைகளை நிர்மாணித்து கும்பாபிஷேகம் நடத்தவே நிலைமை சீரானது. இதன்பின் கட்வல் சமஸ்தானம் ஜீயருக்கு பொன்னும், பொருளும் அளித்து பெருமை சேர்த்தது.

---

# ஸ்ரீமத் பாகவதம்

**"நாமஸ்மரணா தன்யோபாயம் நஹி பஸ்யாமோ பவதரணே"**

பொருள் :

**மோட்சத்தை எளிதாக அடைய நாமத்தை தவிர சிறந்த உபாயம் வேறு இல்லை நாமமே பலம், நாமமே சாதனம்.**

இராம கிருஷ்ண ஹரி பாண்டுரங்க ஹரி

# கடவுள் நம்பிக்கை

ஒருவர் பண்டர்பூருக்கு செல்லும் விட்டல பக்தரிடம் கேட்டார்.

தங்களது வயது என்ன?

பக்தர் : 80

எவ்வளவு காலமாக இந்த பண்டர்பூருக்கு வருகிறீர்கள்?



பக்தர் : 70 வருடங்களாக

பாண்டுரங்கனை நேரடியாக ஒரு முறையாவது பார்த்திருக்கிறீர்களா?

பக்தர் : இல்லை

பிறகு நீங்கள் ஏன் ஒவ்வொரு வருடமும் வருகிறீர்கள், அவர் அங்கே உண்மையாக இருக்கிறார் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

பக்தர் : மக்கள் வீட்டில் வளர்ப்பு நாய்களை வைத்திருக்கிறார்கள். நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

ஆம், வீடுகளில் நாய் வளர்க்கிறார்கள்

பக்தர் : கிராமத்திலும், நகரங்களிலும் நாய்களை வளர்க்கிறோம், அது திருடர்களிடமிருந்து பாதுகாக்க பண்ணையை சுற்றி வருகிறது. இரவில் ஒரு நாய் திருடனைப் பார்த்தால் அது குறைக்கத் தொடங்குகிறது. இந்த நாயின் சத்தத்தை கேட்பதன் மூலம் மற்றொரு நாய் குரைக்கத் தொடங்குகிறது. சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான நாய்கள் குரைக்கத் தொடங்குகின்றன. ஆனால் நூறு நாய்களில் 99 திருடனைப் பார்க்கவில்லை, ஆனால் முதல் நாய் மீது அனைத்தும் நம்பிக்கை வைத்து குரைக்கத் தொடங்குகிறது. அது போலவே மிக உயர்ந்த பக்தர்களான துக்காராம் மகராஜ், சாந்த் ஞானேஸ்வர், நாமதேவர், புண்டரிகர், கோராகும்பர் மற்று எண்ணற்ற பக்தர்கள் பாண்டுரங்கனை நேரடியாக தரிசனம் பெற்றிருக்கிறார்கள். அதனால் அவர்கள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவர்களின் வழியை பின்பற்றுகிறேன். ஒரு நாள் நானும் பாண்டுரங்கனை தரிசனம் செய்யலாம்.

விலங்குகள் தங்கள் நம்பிக்கையை இன்னொரு விலங்கின் மீது வைத்திருக்க முடிந்தால், ஒரு மனிதனாக இருக்கும் நாம் ஏன் மற்றொருவரின் மீது நம்பிக்கை வைக்க முடியாது? பூர்வாச்சாரியர்கள் மேல் நாம் வைக்கும் பக்திக்கும் நம்பிக்கைக்கும் பொருள் இது தான்.

ராமகிருஷ்ண ஹரி பாண்டுரங்க ஹரி

# கோவில் கும்பாபிஷேகம்

கோவில் கும்பாபிஷேகம் அதிகம் பார்த்திருப்பீர்கள், கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் கும்பாபிஷேகம் என்பது என்ன, அதில் என்ன, என்ன பூஜை செய்கிறார்கள் என்று பலருக்கும் தெரியாது இப்போது அதை தெரிந்து கொள்ளுங்கள்.

**கும்பாபிஷேகத்தின் வகைகள் : ஆவர்த்தம் :** ஓரிடத்தில் புதிதாக ஆலயம் அமைத்துப் பிரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திகளுக்கு கும்பாபிஷேகம் செய்யப்படுவது.

**அனாவர்த்தம் :** பூஜை இல்லாமலும், ஆறு, கடல் இவற்றால் சிதிலமடைந்திருந்தாலும் அக்கோயிலை புதிதாக நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் செய்வது.

**புனராவர்த்தம் :** கருவறை, பிரகாரம், கோபுரம் முதலியன பழுது பட்டிருந்தால் பாலாலயம் செய்து அவற்றை புதுப்பித்து அஷ்டபந்தனம் சார்த்தி, பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வது.

**அந்தரிதம் :** கோவில் உள்ளே ஏதேனும் தகாதது நேர்ந்து விடின் அதன் பொருட்டு செய்யப்படும் பரிகார பூஜை.



கும்பாபிஷேகத்தில் விக்ரகப் பிரதிஷ்டையில் மேற்கொள்ளப்படும் அவசியமான பூஜைகள் பற்றிய விளக்கம்.

**அனுக்ஞை :** (அனுமதி வாங்குதல்) செயல்களைச் செய்யும் ஆற்றல் மிக்க ஓர் ஆசாரியனைத் (புரோகிதர்) தேர்ந்து எடுத்து இச்செயலைச் செய்வதற்கு இறைவன் அனுமதி பெற்று நியமனம் செய்தல்.

**சங்கல்பம் :** இறைவனிடத்தில் நமது தேவைகளை கோரிக்கையாக வைத்தல்.

**பாத்திர பூஜை :** இறைவனுக்காக செய்யப்படும் பூஜைக்குண்டான பூஜை பாத்திரங்களை சுத்தம் செய்யும் பொருட்டு அந்தந்த பாத்திரங்களுக்குரிய தேவதைகளை பூஜை செய்தல்.

**கணபதி பூஜை :** செயல் இனிது நிறைவேற கணபதியை வழிபடுதல்.

**வருண பூஜை :** சுத்தம் செய்யும் பொருட்டு வருண பகவானையும், சப்த நதி தேவதைகளையும் வழிபடுதல்.

**பஞ்சகவ்யம் :** ஆத்ம சுத்தி செய்யும் பொருட்டு பசு மூலமாக கிடைக்கும் பால், தயிர், நெய், பசுநீர், பசுஞ்சாணம் முதலியவைகளை வைத்து செய்யப்படும் கிரியை.

**வாஸ்து சாந்தி :** தேவர்களை வழிபட்டு கும்பாபிஷேகம் எவ்வித இடையூறுமின்றி

இனிது நிறைவேற கும்பாபிஷேக செயலுக்கும், செய்பவர்களுக்கும் இடையூறு வராதபடி காக்கச் செய்யும் செயல்.

**பிரவேச பலி :** எட்டு திக்கிலும் உள்ள திக் பாலகர்களுக்கு உரிய பிரீதி செய்து அவர்களை அந்தந்த இடத்தில் இருக்க செய்தல் (துர் தேவதைகளை வர விடாமல் காக்கும் பொருட்டு செய்யப்படும் பரிகாரம்).

**மிருத்சங்கிரஹணம் :** (மண் எடுத்தல்) அஷ்டதிக் பாலகர்களிடம் அனுமதி பெற்று சுத்தமான இடத்தில் இருந்து மண் எடுத்து அந்த பள்ளத்தில் அபிஷேகம் செய்தல் (ஆலயம் நிர்மாணம் செய்ய பூமி தாயான பூமா தேவியை கஷ்டப்படுத்தியதன் காரணமாக பூமா தேவியை மகிழ்விக்க செய்யப்படும் சாந்தி பரிகாரம்).

**அங்குரார்ப்பணம் (முறையிடுதல்) :** எடுத்த மண்ணில் விதைகளையிட்டு முளை வளர செய்தல். இதில் 12 சூர்யர்களான வைகர்த்தன், விவஸ்வதன், மார்த்தாண்டன், பாஸ்கரன், ரவி, லோகபிரகாசன், லோகசாட்சி, திரிவிக்ரமன், ஆதித்யன், சூரியன், அம்சுமாலி, திவாகரன் போன்ற இவர்களையும் சந்திரனையும் வழிபடுதல்.

**ரக்ஷாபந்தனம் (காப்புக்கட்டுதல்) :** பூஜைகளை செய்யும் ஆசாரியனுக்கும் மற்ற உதவி ஆசாரியர்களுக்கும் எவ்வித இடையூறுகளும் வராதபடிக் காத்தற் பொருட்டு அவர்கள் கையில் மந்திர பூர்வமாகக் காப்பு (கயிறு) கட்டுதல்.

**கும்ப அலங்காரம் :** கும்பங்களை (கலசம்) இறைவன் உடம்பாக பாவித்து அலங்காரம் செய்தல்.

**கலா கர்ஷ்ணம் :** (சக்தி அழைத்தல்) விக்ரஹத்தில் இருக்கும் சக்தியை கும்பத்திற்க்கு மந்திர பூர்வமாக அழைத்தல்.

**யாகசாலை பிரவேசம் :** கலசங்களை யாகசாலைக்கு அழைத்து வருதல்.

**சூர்ய சோம பூஜை :** யாகசாலையில் சூரிய சந்திரனை வழிபடுதல்.

**மண்டப பூஜை :** அமைக்கப்பட்டிருக்கும் யாகசாலையை பூஜை செய்தல்.

**பிம்ப சுத்தி :** விக்ரகங்களை மந்திர பூர்வமாக சுத்தம் செய்தல்.

**நாடி சந்தானம் :** யாகசாலை இடத்திற்கும் மூல திருமேனிக்கும் தர்பைக் கயிறு, தங்க கம்பி, வெள்ளிக் கம்பி அல்லது பட்டுக் கயிறு இவற்றால் இணைப்பு ஏற்படுத்துதல் (இறைவனின் சக்தியில் ஒரு பகுதியை இந்த இணைப்பு மூலமாக விக்ரஹங்களுக்கு கொண்டு சேர்த்தல்)

**விசேஷ சாந்தி :** 36 தத்துவ தேவதைகளுக்கும் பூஜை செய்வது, உலகத்தில் உள்ள அனைத்து ஆத்மா பித்ருக்களுக்கும் சாந்தி செய்வது.

**பூத சுத்தி :** இந்த பூத (மனித) உடம்பை தெய்வ உடம்பாக மந்திர பூர்வமாக மாற்றி அமைத்தல்.

**ஸ்பர்ஷாஹூதி :** 36 தத்துவங்களை யாகத்திலிருந்து மூல விக்ரகங்களுக்கு

கொண்டு சேர்த்தல்.

**அஷ்டபந்தனம் :** எட்டு பொருள்களால் ஆன இம் மருந்தினால் மூர்த்தியையும் பீடத்தையும் ஒன்று சேர்த்தல் இதை மருந்து சாத்துதல் என்பர்.

**பூர்ணாஹூதி :** யாகத்தை பூர்த்தி செய்தல்.

**கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) :** யாக சாலையில் மூர்த்திகளுக்குரியதாக வைத்துப் பூஜிக்கப்பட்ட குடத்து நீரை அந்தந்த மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்தல். இதனால் அந்த மூர்த்தி அந்த விக்ரகத்தில் எழுந்தருள்கிறார்.


கும்பாபிஷேகம் முடிந்த பிறகு மூல விக்ரஹத்திற்கு முறைப்படி அபிஷேகம் அலங்காரம்.

**மண்டலாபிஷேகம் :** பிறந்த குழந்தையாக விக்ரஹத்தில் வீற்றிருக்கும் இறைவனை 48 நாட்கள் விஷேச அபிஷேக, பூஜைகள் செய்து முழு சக்தியுடன் இருக்கச் செய்வது.

**மற்றும் சில : ஏக குண்டம் :** ஒரு குண்டம் அமைத்தல், **பஞ்சாக்னி :** ஐந்து குண்டம் அமைத்தல், **நவாக்னி :** ஒன்பது குண்டம் அமைத்தல், **உத்தம் பக்ஷம் :** 33 குண்டம் அமைத்தல். கும்பாபிஷேகத்திற்கு செய்யப்படும் யாகங்களை எத்தனை தடவை செய்ய வேண்டும் என்று விதிமுறை உள்ளது. அது 2 காலம், 4 காலம், 8 காலம், 12 காலம் வரை செய்யும் முறை வழக்கத்தில் உள்ளது.

# ஸ்ரீ பூதநாராயண பெருமாள்

திருவண்ணாமலை வடக்கு மாடவீதி கிரிவலப்பாதையில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பூதநாராயணர் கோயிலிலிருந்து தான் கிரிவலம் துவங்கி அங்கேயே முடித்து தீர்த்தம் வாங்கி பூர்த்தி செய்வர்.



தாய்மாமன் கம்சனை கொல்ல அவதாரம் எடுத்தார் ஸ்ரீ கிருஷ்ணர். கிருஷ்ணரை அழித்திட பல தந்திரங்களை மேற்கொண்டான் கம்சன். பூதனை எனும் அரக்கியை மிகவும் அழகான பெண்ணாக மாற்றி கிருஷ்ணரை கொல்ல அனுப்பினான் கம்சன்.

பூதனை கிருஷ்ணனை தாய் போல தழுவி மார்பில் அணைத்து முலைப்பால் கொடுத்து கொல்ல விழைகிறாள். ஒன்றும் அறியாதவர் போல கிருஷ்ணர் தாய்ப்பாலை உறிஞ்சி அவளை வதம் செய்தார். அதனால் பூதநாராயணன் என அழைக்கப்படுகிறார்.

பூதநாராயணர் அழகுற ஸ்ரீ கிருஷ்ணனாக நெடிய உருவோடு வலது கையில் சக்கரம் தாங்கி, இடதுகை அபய அருள் முத்திரையுடன் குழந்தை கண்ணனாக காட்சி தருகிறார். இந்த வடிவத்தில் ஒரு மன்னர் இங்கு ஆலயம் எழுப்பினார். காலப்போக்கில் ஆலயம் சிதிலமடைந்தது. பக்தர் ஒருவர் கனவில் தோன்றிய மஹாவிஷ்ணு தான் அந்த இடத்தில் புதைந்திருப்பதாக கூறிட ஆலயம் மறுபடியும் எழுப்பப்பட்டது. சுருளிமலையிலும் பூதநாராயணர் ஆலயம் உள்ளது.


KRISHNA DELISH COFFEE
GREAT TASTE
KRISHNA DELISH COFFEE
எங்களிடம் தரமான காபி
கொட்டை அரைத்து தரப்படும்
1 கிலோ காபி பவுடர்
கிருஷ்ண
ஜெயந்தி
நல்வாழ்த்துக்கள்
ரூ 920 மட்டுமே
* Condition Apply
நம்ம ஆத்து காபி
FILTER COFFEE RS.20 only
COFFEE POWDER
DOOR DELIVERY FREE
ALSO AVAILABLE
No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.
Ph : 9941578181
7010878478



மயிலாப்பூர்
கணபதிஸ்
ஸ்தாபிதம் 1942
ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியை எங்கள்
ஸ்பெஷல் காம்போ பேக்
உடன் கொண்டாடுங்கள் !
₹ 650
உப்பு சீடை
200 gms
வெல்ல சீடை
200 gms
தேன்குழல் முறுக்கு
200 gms
பட்டர் முறுக்கு
200 gms
ரிப்பன் பக்கோடா
200 gms
ஸ்ரீவில்லிபுத்தூர் திரட்டிப் பால்
100 gms
ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா
100 gms
கடலை உருண்டை
10 Nos
பொட்டுக்கடலை உருண்டை
10 Nos
அச்சு வெல்லம்
1 No
அவல்
100 gms
காம்போ பேக் உடன் கிருஷ்ணர் பாதம் ஸ்டிக்கர் இலவசமாக பெறுங்கள் !
• கவுண்டர் சேல்ஸ் ஆகஸ்ட் 08-ம் தேதி முதல் • ஆன்லைன் ஆர்டர் ஆகஸ்ட் 08-ம் தேதி வரை எடுக்கப்படும்
• ஆகஸ்ட் 09-ம் தேதி முதல் 15-ம் தேதி வரை டெலிவரி செய்யப்படும் • டெலிவரி கட்டணம் உண்டு
மயிலாப்பூர் கிளை :
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
(பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்)
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272
மேற்கு மாம்பலம் கிளை :
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363
ஆன்லைன் ஆர்டர்கள்
www.myla poreganapathys.com